புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஜனவரி 02, 2025 • புரட்சி 24 • முழக்கம் 52 • விலை ரூ.3.00

## அடைமழையாகப் பரப்புரைக் கூட்டங்கள்

# 2024 - கழகத்தின் களப்பணிகள்

**ஜனவரி:** சென்னை மாவட்டம் திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், வட சென்னை, திருப்பூரில் கழக சார்பில் பொங்கல் விழாக்கள் நடந்தன. திருவல்லிக்கேணி விழாவில் சென்னை மேயர் பிரியா சிறப்பு விருந்தினர்.

திருப்பூர் மாநகர கழக அமைப்பாளர் முத்து - வசந்தி இணையர் குடும்ப விழாவை இந்திய அரசியலும் பார்ப்பனியமும் என்ற கருத்தரங்கமாக நடத்தினர். சிறப்புரை : கொளத்தூர் மணி.

**பிப்ரவரி:** ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியின் சர்வாதிகாரத்தை எதிர்த்துக் கழகம் தொடர் கூட்டங்களை நடத்தியது. சென்னை, சேலம், திண்டுக்கல், திருச்சி மற்றும் ஈரோடு தெற்கு பகுதிகளில் கூட்டங்கள் நடந்தன.

பிப்ரவரி 03: மதுரை மாவட்டக் கழக சார்பில் ஜாதி மறுப்பு இணையர்களுக்குப் பாராட்டு விழா.

பிப்ரவரி 15: திண்டுக்கல், திருப்பூர், சென்னை மாவட்டங்களில் “சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்” “சமூக ஒற்றுமையைக் காப்போம்” தொடர் பரப்புரைக் கூட்டங்கள் நடந்தன. மேட்டூரில் பரப்புரைக் கூட்டத்துக்கு ஜலகண்டபுரம் காவல்துறை அனுமதி மறுத்தது. உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அனுமதி பெற்று கூட்டங்கள் நடந்தன. கொளத்தூர் மணி உரையாற்றினார். உடுமலையில் பரப்புரைக் கூட்டம் நடந்தது.

பிப்ரவரி 25 முதல் மார்ச் 15 வரை ஆத்தூர், ஈரோடு, பொள்ளாச்சி, ஆனைமலை, மேட்டூர், கொளத்தூர், மேட்டூர் ஆர்.எஸ். பகுதிகளில் பரப்புரைக் கூட்டங்கள் நடந்தன.

**மார்ச்:** நீதிமன்றங்களில் தமிழ் வழக்காடு மொழியாக்க சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கழக சார்பில் தபசி குமரன், உமாபதி ஆகியோர் பங்கேற்று ஆதரவு தெரிவித்தனர்.

கோவை மாவட்டக் கழக சார்பில் அண்ணா நினைவுநாள் கருத்தரங்கில் கொளத்தூர் மணி பேசினார். முழக்கத்துக்கு ரூ.75,000/- சந்தா வழங்கினர்.

நங்கவள்ளி கழகக் கூட்டம் பரபரப்புடன் நடந்தது. கலவரம் செய்ய முயன்ற சங்கிகள் விரட்டியடிக்கப்பட்டனர். காவை இளவரசனின் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி. கொளத்தூர் மணி சிறப்புரை. (மார்ச் 5)

கடலூர் மாவட்டம் மங்களூரில் கழகப் பரப்புரை; கொளத்தூர் மணி சிறப்புரை. மதுரை புதூரில் பரப்புரைக் கூட்டம்; கொளத்தூர் மணி சிறப்புரை (மார்ச் 9)

சென்னையில் தலைமை அலுவலகத்தில் மகளிர் நாள் மற்றும் மணியம்மையார் பிறந்தநாள் நிகழ்ச்சி காலை முதல் மாலை வரை நடைபெற்றது. ஆசிரியர் சிவகாமி சிறப்பு அழைப்பாளர் ( மார்ச் 10)

கள்ளக்குறிச்சி, மதுரை, ஆத்தூரில் பரப்புரைக் கூட்டங்கள் நடந்தன. தஞ்சை கூட்டத்தில் பால். பிரபாகரன் சிறப்புரை.

**ஏப்ரல்:** பா.ஜ.க. வேட்பாளர் திருப்பூரில் ஓட்டு கேட்க வந்த போது ஜி.எஸ்.டி. குறித்து கேள்வி கேட்ட கழகத் தோழர் சங்கீதாவைத் கடையில் புகுந்து பா.ஜ.க.வினர் ஆபாசமாகப் பேசி தாக்கினார்கள். அய்ந்து சங்கிகள் கைது செய்யப்பட்டனர். தமிழ்நாடு முதல்வர், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டன அறிக்கை விடுத்தனர்.

சென்னையில் மறைந்த களப்போராளி பத்ரி நாராயணன் நினைவுநாளில் தோழர்கள் உறுதி ஏற்பு. (ஏப்ரல் 30)

**பரப்புரைக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், கருப்புக்கொடி ஆர்ப்பாட்டங்கள், கருத்தரங்கங்கள் என்று 2024ஆம் ஆண்டு கழகத் தோழர்கள் தொடர்ச்சியாக களமிறங்கினர். பெரியார், அம்பேத்கர், பிறந்தநாள், நினைவுநாள் நிகழ்வுகளைத் தவிர்த்து கழகத் தோழர்களின் களச் செயல்பாடுகள் ஒரு தொகுப்பு.**

**மே:** தாரமங்கலத்தில் சுயமரியாதை இயக்கம் - குடிஅரசு நூற்றாண்டு விழா நகரக் கழக சார்பில் நடந்தது. கொளத்தூர் மணி சிறப்புரை (மே 25)

தீவட்டிப்பட்டி கோயில் திருவிழாவில் ஜாதி வன்முறைக் கலவரம்; உண்மை அறியும் குழுவில் கொளத்தூர் மணி, கண.குறிஞ்சி உள்ளிட்டத் தோழர்கள் நேரில் சென்று விசாரணை நடத்தி அறிக்கை வெளியிட்டனர். (மே2)

சென்னை தலைமைக் கழகத்தில் நிமிர்வோம் வாசகர் வட்டத்தில், சுகுணா திவாகர், ரவிபாரதி சிறப்புரையாற்றினர். (மே 19)

### கழகம் எதிர்ப்பு; நாமக்கல் வேட்பாளர் மாற்றப்பட்டார்

**ஈரோட்டில் கழக செயலவைக் கூடி தி.மு.க. அணியை ஆதரிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது. (மார்ச் 27) நாமக்கல் தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக அறிவிக்கப்பட்ட சூரியமூர்த்தி (கொ.ம.தே.க.) வேட்பாளரின் ஜாதிவெறிப் பேச்சைக் கழகம் கண்டித்து வேட்பாளரை மாற்றக் கோரி தீர்மானம் நிறைவேற்றியது. வேட்பாளர் உடனே மாற்றப்பட்டார். முதல் குரலைக் கழகமே கொடுத்தது.**

பார்ப்பன எச்சில் இலையில் உருளும் கோயில் சடங்கை நியாயப்படுத்தி தீர்ப்பு வழங்கிய பார்ப்பன நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதனைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிக்குக் கொளத்தூர் மணி கடிதம் எழுதினார்.

சத்தியமங்கலத்தில் பெரியார் படிப்பகத்தை இராம.இளங்கோவன் திறந்து வைத்தார். (மே26)

மடத்துக்குளத்தில் கழக பயிலரங்கம், இரண்டுநாள் சிறப்புடன் நடந்தது. (மே 21,22)

**ஜூன்:** திண்டுக்கல் மாவட்டக் கழக சார்பில் கீரனூரில் இரண்டு நாள் பயிலரங்கம் சிறப்புடன் நடந்தது. சிறப்புரை : கொளத்தூர்மணி, பால். பிரபாகரன், கலைச்செல்வன். (ஜூன் 11,12)

பாளையங்கோட்டை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில், ஜாதி மறுப்பு இணையருக்கு அடைக்கலம் தந்ததற்காக ஜாதி வெறியர்கள், கட்சி அலுவலகத்தில் தாக்குதல் நடத்தினர். கொளத்தூர் மணி கழக சார்பில் கண்டனம் தெரிவித்தார்.

பெரியார் பல்கலைக்கழகத்தில் ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான துணைவேந்தரைப் பணி நீக்கம்செய்ய வேண்டும் என்று கொளத்தூர் மணி அறிக்கை விடுத்தார்.

தாரமங்கலத்தில் கழகப் பொதுக்கூட்டம், கொளத்தூர்மணி சிறப்புரையாற்றினார். கழகத் தலைவரின் பிறந்தநாளை ஒட்டி சென்னை, திருப்பூர், திண்டுக்கல், கோவை மாவட்டக் கழகத் தோழர்கள் 30 பேர் ‘உடற்கொடை’ அறிவித்தனர். தங்கள் இறப்புக்குப் பிறகு உடலை மருத்துவமனைக்கு அளிக்க முன்வந்தனர். (ஜூன் 20)

பாளையங்கோட்டை கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் தாக்கப்பட்டத்தைக் கண்டித்து ராசிபுரம் கழக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

கொளத்தூரில் கழகத் தலைவர் பிறந்தநாள் விழா கழகக் குடும்ப விழாவாகக் கொண்டாடப்பப்பட்டது. (ஜூன் 23)

**அஞ்சல் சலுகை ரத்துக் காரணமாக ஜூலை 14 முதல் செப்டம்பர் 07 வரை புரட்சிப் பெரியார் முழக்கம் அச்சிதழாக வெளிவரவில்லை. இணைய இதழாக வெளிவந்தது.**

**ஜூலை:** கோவை மாவட்டக் கழக சார்பில் ஒருநாள் பயிற்சி வகுப்பு; கொளத்தூர் மணி, பால்.பிரபாகரன், சிற்பி இராசன் பங்கேற்பு. (ஜூலை 14)

விருதுநகர் அழகேந்திரன் ஆணவப் படுகொலையைக் கண்டித்து மதுரையில் கழகம் ஆர்ப்பாட்டம். பால்.பிரபாகரன், மணிஅமுதன் சிறப்புரை. (ஜூலை 15)

**கழகத் தலைமைக்குழு சென்னையில் கூடியது. (ஜூலை 19)**

படுகொலை செய்யப்பட்ட பகுஜன் சமாஜ் தலைவர் ஆம்ஸ்ட்ராங் இல்லம் சென்று கொளத்தூர் மணி ஆறுதல். (ஜூலை 20)

**ஆகஸ்ட் :** தலைமைக்குழு தமிழ்நாடு தழுவிய சுற்றுப்பயணத்தை உருவாக்கியது. அதன்படி கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள் ஆகஸ்ட் 04 தொடங்கி 24ஆம் தேதிவரை மாவட்டம் தோறும் கழக நிர்வாகிகளைச் சந்தித்தனர். சென்னையில் தொடங்கி தூத்துக்குடியில் நிறைவடைந்தது.

**செப்டம்பர் :** மேட்டுப்பாளையத்தில் பெரியார் பிறந்தநாள் விழா கூட்டம். சிற்பி இராசன் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி நடத்தினார். பொருளாளர் துரைசாமி சிறப்புரை.

நிமிர்வோம் வாசகர் வட்டம் சென்னையில் கழகத் தலைமை அலுவலகத்தில் நடந்தது. குன்றக்குடி அடிகளார் நினைவு உரையை விடுதலை இராசேந்திரன் நிகழ்த்தினார். ஜெயப்பிரகாசு, சேரன்மாதேவி குருகுலப் போராட்டத்தின் நூற்றாண்டு நினைவு உரை நிகழ்த்தினார். (செப் 29)

மேட்டூரில் காவல்துறையைக் கண்டித்து கழகப் பொதுக்கூட்டம் கொளத்தூர் மணி, வழக்கறிஞர் திருமூர்த்தி கண்டன உரை. (செப் 4)

கல்வி உரிமைக் கோரி சேலத்தில் கழக மாணவரணி - இளைஞரணி இணைந்து ஆர்ப்பாட்டம், கொளத்தூர் மணி சிறப்புரை (செப் 10)

சென்னையில் வள்ளுவர் கோட்டத்தில் மாவட்டக் கழக - மாணவரணி - இளைஞரணி ஆர்ப்பாட்டம்.(செப் 10) விடுதலை இராசேந்திரன், பிரின்சு கஜேந்திரபாபு சிறப்புரை.

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

# மியூசிக் அகாடமியின் புரட்சி



கர்நாடக இசைக் கலைஞரான டி.எம். கிருஷ்ணாவுக்கு ‘சங்கீத கலாநிதி’ பட்டம் வழங்குவதாக மியூசிக் அகாடமி அறிவித்தவுடன் இரண்டு பெண் பார்ப்பன கர்நாடக இசைக் கலைஞர்கள் பொங்கி எழுந்தார்கள். சங்கராச்சாரிகளை எதிர்க்கும் டி.எம். கிருஷ்ணாவுக்கு எப்படி விருது வழங்கலாம் என்று மியூசிக் அகாடமியின் தலைவர் முரளி அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். டி.எம்.கிருஷ்ணா தலைமை தாங்கும் இசை மாநாட்டை தாங்கள் புறக்கணிக்கப்போவதாகவும் அறிவித்தனர்.

இதற்கு அகாடமியின் தலைவர் முரளி, நாங்கள் விருது வழங்குவதற்கு ஒருவரது இசைத் திறமையைத் தான் மதிப்பிடுகிறோமே தவிர அவர் எந்தக் கருத்தைக் கொண்டிருக்கிறார் என்பதின் அடிப்படையில் அல்ல என்று பதிலடி கொடுத்தார்.

நந்தினி, காயத்ரி என்ற இரண்டு பார்ப்பனப் பெண்களும், பிராமணர்களை இனப்படுகொலை செய்யச் சொன்னார் என்று கூறியப் பெரியாரை இவர் புகழ்கிறார் என்று உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர்.

காயத்ரி, நந்தினி ஆகியோரின் எதிர்ப்பைத் தொடர்ந்து சங்கீத கலாநிதி விருது பெற்ற டி.எம்.கிருஷ்ணாவுக்குத் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது வாழ்த்துகளை தெரிவித்ததுடன், பெரியார் மீது சுமத்தப்பட்ட அவதூறுகளுக்கும் அவர் பதிலளித்தார்.

சித்திர வீணை இசைக் கலைஞரான ரவிக்கிரன், டி.எம்.கிருஷ்ணாவை எதிர்த்து மியூசிக் அகாடமி தனக்கு வழங்கிய விருதைத் திருப்பியளிப்பதாக அறிவித்தார். ஹரி கதை காலட்சேபகர் துஸ்யந்த் ஸ்ரீதர் என்பவர் தர்மம், அயோத்தியா, ஸ்ரீ ராம பகவான் குறித்து டி.எம். கிருஷ்ணாவின் கருத்துக்களால் நான் மிகவும் துயரமடைந்துள்ளேன் என்று கூறியதோடு பரமாச்சரியாருக்கும், சங்கீத ஆத்மாவுக்கும் இது எதிரானது என்று கூறுகிறார்.

எம்.எஸ்.சுப்புலட்சுமி பெயரில் கிருஷ்ணா வுக்கு விருது வழங்கக் கூடாது என்று அவரின் பேரன் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். நீதிமன்றம், விருது வழங்கலாம், எம்.எஸ்.சுப்புலட்சுமி பெயரில் வழங்கக் கூடாது என்று தீர்ப்பளித்தது. இவை எல்லாம் கடந்த மார்ச் மாத நிகழ்வுகள். டிசம்பர் 26 அன்று மியூசிக் அகாடமியில் டி.எம்.கிருஷ்ணாவின் இசை பெரும் புரட்சியைச் செய்தது. ஜாதி கடந்து பல்லாயிரக்கணக்கில் ரசிகர்கள் திரண்டனர். லுங்கிக் கட்டிக் கொண்டு வந்தார் டி.எம்.கிருஷ்ணா; அவள் பாடும் கர்நாடக சங்கீதத்தில் தனக்கும் ‘மேதமை’ உண்டு என்று நிரூபித்தார். அனைத்து மதங்களும் சமம், மக்கள் சுதந்திரம் பெற வேண்டும் என்ற பாடல்கள் அரங்கை அதிரச் செய்தது. மியூசிக் அகாடமி என்ற ‘அர்த்த மண்டபத்தின்’ மரபை டி.எம்.கிருஷ்ணா உடைத்தார். அகாடமியின் செயலாளர் ‘இந்து’ முரளி அதற்குத் துணை நின்றார். பார்ப்பனியத்தை பார்ப்பனர்களே எதிர்க்கத் துவங்கிய வரலாற்றுத் திருப்பம். 2024இல் நடந்து முடிந்திருக்கிறது. பார்ப்பனர்களின் பார்ப்பன விலக்கம் என்பது மகத்தானப் புரட்சி!

# ஆளுநருக்கு எதிரான கடிதப் போராட்டம்!

**முதல் பக்கத் தொடர்ச்சி**

*தேனி, திண்டுக்கல், திருச்சி, கோவை, திருப்பூர், கள்ளக்குறிச்சி, ஈரோடு, நாமக்கல், மயிலாடுதுறை, காஞ்சிபுரம் உள்ளிட்ட ஊர்களில் கழகம் புதியக் கல்விக் கொள்கைத் திணிப்பைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.*

*சென்னையில் ‘பெரியார் அன்றே எச்சரித்தார்! என்ற தலைப்பில் திருவல்லிக்கேணியில் நடந்தக் கூட்டத்தில் கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன், அமைச்சர் மனோ தங்கராஜ் சிறப்புரை (செப் 21)*

*குமாரபாளையத்தில் குடிஅரசு - சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டம் - வாகனப் பேரணி. சிற்பி இராசனின் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி, கொளத்தூர் மணி சிறப்புரை.*

**அக்டோபர் :** *சேலம் அருகே பூசநாயக்கனூரில் வன்னிய ஜாதிவெறியர்கள் அருந்ததியர்கள் வீட்டைச் சூறையாடினர். கழகத் தோழர்கள் நேரில் சென்று கள ஆய்வு செய்து அறிக்கை விடுத்தனர்.*

*அரசு தொலைக்காட்சி நடத்திய இந்திமாத விழாவில் கலந்துகொண்ட ஆளுநர் ரவி, நிகழ்ச்சியில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலில் ‘திராவிட நல் திருநாடு’ வரிகள் தவிக்கப்பட்டதைக் கண்டித்து கண்டனங்கள் வெடித்தன. அந்த வரிகளை அஞ்சல் அட்டையில் அச்சடித்து ஆளுநருக்கு அனுப்பும் போராட்டத்தைக் கழகம் நடத்தியது. சென்னை, திருப்பூர், தேனி, மதுரையில் ‘அஞ்சல் அட்டைகள்’ ஆளுநருக்கு அனுப்பப்பட்டன. பொள்ளாச்சியில் கழக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் ஒன்றிய ஆட்சியின் திட்டத்தை பரப்புரை செய்ய வந்த ஆளுநர் ரவியை எதிர்த்து சேலத்தில் கழக சார்பில் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கொளத்தூர் மணி தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கைதாகினர்.*

*ஈரோட்டில் அரசு நிலத்தை ஆக்கிரமித்து போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த ராம பக்த ஆஞ்சநேயர் கோயிலை இடிக்க வேண்டும் என்று அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். கோயிலை இடிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.*

*எடப்பாடியில் கழக சார்பில் பெரியார் பிறந்தநாள் விழா கூட்டம், கொளத்தூர் மணி சிறப்புரை. (அக் 23)*

*திருச்சியில் விடுதலை இராசேந்திரன், ஓவியா எழுதிய நூல்களை மலிவு விலைப் பதிப்பாக நன்செய் பதிப்பகம் வெளிட்டது. வெளியீட்டு விழா திருச்சியில் நடைபெற்றது. சிறப்புரை கொளத்தூர் மணி.*

*கொடைக்கானலுக்கு வந்த ஆளுநர் ரவிக்கு திண்டுக்கல் மாவட்டக் கழகம் கருப்புக் கொடி. (அக் 23)*

**நவம்பர் :** *அறநிலையத்துறை நடத்தும் கல்வி நிலையங்களில் மதப்பிரச்சாரம் செய்வதை எதிர்த்து சென்னையில் முதலமைச்சருக்குக் கோரிக்கை மனு அளிக்க தமிழ்நாடு மாணவர் கழகம் முடிவெடுத்தது. திருவல்லிக்கேணி கழகப் படிப்பகத்தில் இருந்து மனுவை அஞ்சல் வழியாக அனுப்ப அஞ்சலகம் புறப்பட்ட கழக மாணவர்களைக் கைது செய்து தனியார் மண்டபத்தில் நாள் முழுவதும் அடைத்து வைத்து இரவு 8 மணிக்கு மேல் விடுதலை செய்தனர். (நவம்பர் 5)*

*பேராவூரணியில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழாவும், மாணவரணி கலந்துரையாடலும் நடந்தது. பால்.பிரபாகரன் சிறப்புரை.*

*1957 அரசியல் சட்ட எரிப்புப் போராளிகளுக்கு வீரவணக்க நாள் கூட்டம் சென்னை, பழனி, சேலம், மேட்டூர் மற்றும் கோவையில் நடந்தது. (நவம்பர் 26)*

*கொளத்தூர் அருகே விடுதலைப் புலிகள் பயிற்சி பெற்ற புலியூரில் மாவீரர் நாள் எழுச்சியுடன் நடந்தது. தோழர் தியாகு, அற்புதம்மாள் சிறப்புரையாற்றினர். (நவ 27)*

*தமிழ்நாடு மாணவர் கழகக் கலந்துரையாடல் கூட்டம் நங்கவள்ளியில் நடந்தது. (நவம்பர் 30) கொளத்தூர் மணி பங்கேற்றார். சென்னை, சேலம், பேராவூரணி, திருப்பூர், ஈரோடு, கோவை, தஞ்சையில் இருந்து மாணவர்கள் பங்கேற்பு.*

**டிசம்பர் :** *நங்கவள்ளியில் ஒரு நாள் பயிலரங்கம் நடந்தது. கொளத்தூர் மணி, பிரபாகரன், சிவகாமி வகுப்புகளை எடுத்தனர். (டிசம்பர்*

*சட்ட எரிப்பு வீரர்களுக்கு வீரவணக்கக் கூட்டம் கள்ளக்குறிச்சியில் நடந்தது. அய்யனார் சிறப்புரை (நவம்பர் 26)*

*சென்னை பல்லாவரத்தில் ஜாதி ஒழிப்பு - மாவீரர் நாள் பொதுக்கூட்டம் எழுச்சியுடன் நடந்தது. சிறப்புரை விடுதலை இராசேந்திரன். (டிசம்பர் 14)*

*டிசம்பர் 20 அன்று தலைமைக்குழுவும், 21 அன்று செயலவையும் மேட்டூரில் கூடியது.*

# ஒன்றே முக்கால் ஆண்டு சிறையில் வாடிய ஜாதி ஒழிப்புப் போராளி முத்துச்செழியன் விடைபெற்றார்.



1957ஆம் ஆண்டு நடந்த சட்ட எரிப்புப் போராட்டத்தில் சிறை சென்ற இடையாற்றுமங்கலம் தோழர் முத்துச்செழியன் (92) டிசம்பர் 27 அன்று முடிவெய்தினார். ஜாதி ஒழிப்புப் போராளிகள், ஜாதி மறுப்புத் திருமணமே செய்வோம் என்று உறுதி எடுத்தனர். அந்த உறுதியைக் காப்பாற்றி ஜாதி மறுப்புத் திருமணம் செய்தவர். சிறையில் இருக்கும் போதே தனது பி.ஏ. பட்டப்படிப்புக்கான தேர்வை திருச்சி தேசியக் கல்லூரியில் போலீஸ் பாதுகாப்புடன் எழுதியவர்.

1957, நவம்பர் 26இல் கைதாகி 1959 ஏப்ரலில் விடுதலையானார். வசதியான குடும்பத்தில் பிறந்தவர். சிறையில் ‘பி’ வகுப்பு தர அதிகாரிகள் முன்வந்தனர். ஏற்க மறுத்து தோழர்களுடன் ‘சி’ வகுப்பிலேயே தங்கினார்.

நீதிபதி பார்ப்பனர் என்பதால் லால்குடி பகுதி தோழர்களுக்கு ஒன்றே முக்கால் ஆண்டு தண்டனை விதித்தார். மற்ற மாவட்டங்களில் ஆறுமாத தண்டனை; நீங்கள் பார்ப்பனர் என்பதால் ஒன்றே முக்கால் ஆண்டு தண்டனை தருகிறீர்கள் என்று நீதிபதியிடமே கூறியவர் முத்துச்செழியன். சிறந்த பேச்சாளர், இறுதிவரை பெரியார் கொள்கையாளராகவே வாழ்ந்தார். கொள்கைப் போராளி முத்துச்செழியனுக்கு திராவிடர் விடுதலைக் கழக சார்பில் புகழ்வணக்கம்.

# தோழர் எஸ்.நடராஜன் முடிவெய்தினார்.



இரட்டைமலை சீனிவாசன் பேரவையின் தலைவர் தோழர் எஸ். நடராஜன் முடிவெய்தினார். (வயது 78) சூளைமேட்டில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்குக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் சரசுவதி ஆகியோர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, பகுதித் தமிழ், கோபிநாத், வீரா ஆகியோர்.

தோழர் எஸ்.நடராஜன், பெரியார் திராவிடர் கழகம் ஒருங்கிணைத்த சமூக நீதிக் கூட்டமைப்பில் இணைந்து சென்னை ஐ.ஐ.டி.யில் நிலவியப் பார்ப்பனிய ஆதிக்கத்துக்கு எதிரானப் போராட்டக் களத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டவர். மிகச்சிறந்த மனிதநேயருக்கு திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் புகழ் வணக்கம் செலுத்துகிறோம்.

# பெரியார் கருத்துகளில் சுழன்ற 2024

**சமூகநீதி சமத்துவத்துக்கு முதற்பெரும் தடை பார்ப்பனிய சமூகக் கட்டமைப்பு என்று பெரியார் அடையாளப்படுத்தினார். வரலாற்றுப் போக்கு இதை உறுதிப் படுத்துகிறது. பிரச்சனைகளின் வடிவங்கள் வெவ்வேறாக இருந்தாலும் மய்யம் பார்ப்பனியம் × திராவிடம்; மனுநீதி × சமூகநீதியாகவே சுழன்று கொண்டிருக்கிறது. இந்தப் பார்வையில் கடந்த ஆண்டின் நிகழ்வுகள் சிலவற்றின் தொகுப்பு.**

- *அயோத்தி இராமன் கோயில் தேர்தலுக்கு முன்பு கட்டுமானப் பணிகள் முடிவதற்கு முன்பே அவசர அவசரமாக ஒன்றிய ஆட்சி திறந்தது. (ஜன 5) மோடி கோயிலுக்குள் இராமன் சிலையைத் தூக்கிச் சென்று கர்ப்பகிரகத்தில் நிலைநாட்டுவார் என்று அறிவிக்கப்பட்டது. பிரதமராக இருந்தாலும் ‘பிறப்பால்’ சூத்திரர்; பூரி பார்ப்பன சங்கராச்சாரி நித்தியானந்த சரஸ்வதி, மோடிக்கு அந்தத் தகுதி இல்லை; இது சாஸ்திரத்துக்கு எதிரானது என்று நிகழ்ச்சியைப் புறக்கணித்தனர். கோயில் திறப்புக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு ஆங்கில ஊடகத்துக்கு அளித்தப் பேட்டியில் வர்ணாஸ்ரமமே சனாதனம், அதை மீற பிரதமராக இருந்தாலும் அனுமதிக்க முடியாது என்று பேட்டியளித்தார். பழங்குடி சமுதாயத்தைச் சேர்ந்த குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அழைக்கப்படவேயில்லை.*

- *குஜராத் கலவரத்தின் போது பில்கிஸ் பானு என்ற இஸ்லாமிய கர்ப்பிணிப் பெண்ணைச் சிசுவோடு எரித்தனர் சங்கிகள். அவரது குடும்ப உறுப்பினர்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர். 11 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. முறைகேடாக குறுக்கு வழியில் தண்டனை குறைப்பு செய்து அவர்களை விடுதலை செய்தது குஜராத் நீதிமன்றம். குற்றவாளிகளை மாலை அணிவித்து வரவேற்றனர் பா.ஜ.க.வினர். இவர்கள் பிராமணர்கள், குற்றம் செய்யமாட்டார்கள் என்றார் ஒரு பா.ஜ.க. அமைச்சர். உச்சநீதிமன்றம் தலையிட்டு விடுதலையை ரத்து செய்து மீண்டும் சிறையில் அடைக்க உத்தரவிட்டது.*

- *அரசுப் பள்ளிகளில் கடவுள் வாழ்த்து - சரசுவதி துதிப் பாடல்கள் பாடப்பட்டு வந்த நிலையில் தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை “சமூகநீதி”ப் பாடலோடு பள்ளிகள் தொடங்க வேண்டும் என்று ஆணையிட்டது. உதயநிதி ஸ்டாலின் இதற்கு முன் முயற்சி எடுத்தார்.*

- *கோயில்களை அரசுக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்து தனியாரிடம் வழங்க வேண்டும் என்பது பார்ப்பனர்களின் நீண்டகாலப் போராட்டம். நீதிக்கட்சியில் பனகல் அரசர், அறநிலையத்துறை வாரியம் கொண்டு வருவதற்கு முன்பு கோயில்கள் பார்ப்பனர்கள், நிலவுடைமையாளர்களின் கொள்ளைக் கூடாரமாக இருந்ததை, சர்.சி.பி.ராமசாமி அய்யர் முதல் பல்வேறு விசாரணை ஆணையங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இந்தப் பின்னணியில் கோயில்களை அறநிலையத்துறையில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று பச்சையாக சட்டத்துக்கு விரோதமானக் கருத்தை உயர்நீதிமன்றப் பார்ப்பன நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன் கருத்தரங்கு ஒன்றில் பேசினார். மூத்த வழக்கறிஞர் துரைசாமி, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட்டுக்கு கடிதம் எழுதி பதவிநீக்கம் செய்யக் கோரினார். தொடர்ந்து நீதிபதிகள் அரசியல் பேசுவதைத் தவிர்க்க வேண்டும் என்று சந்திரசூட் பேசினார்.*

*மற்றொரு பார்ப்பன உயர் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீ மதி, இந்துக் கோயில்களில் பிற மதத்தினரை அனுமதிக்கக் கூடாது என்று தீர்ப்பளித்தார். பழனி முருகன் கோயில் கொடி மரத்தில் இதை அறிவிப்பாக எழுத வேண்டும் என்று தீர்ப்பளித்தார். உண்மையில் பழனி முருகன் கோயில், அங்கே கொடிமரம் இல்லை. அதில் எப்படி எழுத முடியும் என்று ஆன்மீகவாதி சுகி.சிவம் கேட்டார். ‘இந்து’ என்றால் யார் என்ற கேள்வியை முன்னாள் நீதிபதி சந்துரு எழுப்பினார்.*

- *பார்ப்பன பயங்கர வாதத்துக்கு பலியானவர், பகுத்தறிவாளர் தபோல்கர். அவரை மகாராஷ்டிராவில் பயங்கரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். பத்து ஆண்டுகளுக்கு மேல் வழக்கு நடந்தது. மூளையாக செயல்பட்டவரை விடுவித்துவிட்டு அவருக்குக் கருவியாக செயல்பட்ட இருவருக்கு ஆயுள் தண்டனை விதித்தது பம்பாய் சிறப்பு நீதிமன்றம். பூனே காவல்துறையும், சி.பி.அய்.யும் மூளையாக செயல்பட்டவரை காப்பாற்றவே முயற்சித்தது. உரிய ஆவணங்களை மறைத்தது என்று நீதிபதியே தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டினார்.*

*டிசம்பர் திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் “அர்த்த மண்டபத்தில்” இசைஞானி இளையராஜாவை அனுமதிக்க ஜீயர்கள் மறுத்தனர். இந்தத் தீண்டாமையை எதிர்த்து கடும் விவாதங்கள் நடந்தன. பார்ப்பனிய ஆதிக்கம் மேலும் வெளிச்சத்துக்கு வந்தது.*

- *பார்ப்பனர்கள் சென்னையில் தங்களுக்கு தனிப் பாதுகாப்புச் சட்டம் வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள். அர்ஜுன் சம்பத் என்ற ஒரு ‘கோடாரிக் காம்பு’வைத் தலைமை தாங்க வைத்தனர் பார்ப்பனர்கள். ஜாதிவெறியுடன் பேசினார்கள். கஸ்தூரி என்ற பார்ப்பன நடிகை கலைஞர் குடும்பத்தைத் தெலுங்கு மொழிக் குடும்பமாக சித்தரித்து அந்தப்புரச் சேவை செய்ய வந்தவர்கள் என்று சாக்கடை மொழியில் பேசினார். பேசிய பிறகு ஆந்திராவுக்கு ஓடி தலைமறைவானார். போலீசார் தேடிப்பிடித்து கைது செய்தனர். நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன் துணைவியார் அவருக்குப் பிணை வழங்க வேண்டும் என்று அறிக்கைவிட்டார். நீதிபதிகள் குடும்ப உறுப்பினர்கள் வழியாக தங்கள் கருத்தைத் தெரிவிக்கும் அதிசயம் முதன்முதலாக தமிழ்நாட்டில் நடந்தது.*

- *சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற உதயநிதி ஸ்டாலின் தெரிவித்த கருத்துக்குப் பார்ப்பன சக்திகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. உச்சநீதிமன்றத்திலும், பல மாநிலத்திலும் வழக்குகள் தொடரப்பட்டன. ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண், உதயநிதி அழிந்து போவார் என்று சாபமிட்டார். ஆந்திரக் கோயில் வாயில் உதயநிதியின் படத்தை அச்சடித்து அதை காலால் மிதித்து உதயநிதியை அவமதித்தனர்.*

*பார்ப்பனியத்தின் அதிகாரத்தை இந்நிகழ்வுகள் வெளிப்படுத்தின. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியான அனிதா சுமந்த் எனும் பார்ப்பனர் உதயநிதி பேச்சு சட்ட விரோதமானது என்றார். சனாதனத்தை நியாயப்படுத்துவதற்கு ஆதாரங்களைத் தேடி தீர்ப்பில் பதிவு செய்தார். இணையதளத்தில் தனது தீர்ப்பை பதிவேற்றியவுடன் (மார்ச் 9) அடுத்த இரண்டு நாட்களிலேயே தீர்ப்பில் திருத்தங்கள் செய்து வெளியிட்டார். (மார்ச் 10) தீர்ப்பைத் திருத்த வேண்டுமானால் மீண்டும் நீதிமன்ற நடவடிக்கை வழியாகவே செயல்படுத்த வேண்டும் என்ற சட்டத்தை மீறி செயல்பட்டார். பார்ப்பனியத்தின் முறைகேடுகளை மக்கள் மன்றம் புரிந்துகொண்டது.*

- *நாடாளுமன்றத்தில் புரட்சியாளர் அம்பேத்கரை உள்துறை அமைச்சர் அமித்ஷா அவமதித்தார். அந்தப் பெயரை உச்சரிப்பதே ஃபேஷன் ஆகிவிட்டது என்றும் அதற்குப் பதிலாக கடவுள் பெயரை கூறினால் மோட்சம் போகலாம் என்றும் பேசினார். அமித்ஷாவுக்கு எதிர்வினையாக மோட்சத்துக்கு எதிராகவும், கடவுள் மற்றும் பார்ப்பனியத்துக்கு எதிராகவும் கருத்துகள் வெடித்துக் கிளம்பின.*

- *புதிய நாடாளுமன்றத்தின் திறப்பு விழா வேத வைதீக மரபுப்படி நடத்தப்பட்டது. தீட்டாகிவிடும் என்று நாடாளுமன்றத்தின் சட்டப்பூர்வ தலைவரான குடியரசு தலைவர் திரௌபதி முர்மு ஒரு பழங்குடி சமூகத்தை சார்ந்தவர் என்பதால் புறக்கணிக்கப்பட்டார். இதற்கு எதிர்வினையாக பார்ப்பனிய எதிர்ப்புக் கருத்தியல் ஊடகங்களில் விவாதிக்கப்பட்டன.*


**தொகுப்பு : கே.ஆர்.**



## 40க்கு 40

**தமிழ்நாட்டில் 40 நாடாளுமன்ற தொகுதிகளில் தி.மு.க. அணி வெற்றி வாகை சூடியது. பா.ஜ.க.வின் 400 எண்ணிக்கைக் கனவைத் தகர்த்து 240 என்ற எல்லையில் நிறுத்திய பெருமை தமிழ்நாடு வாக்காளருக்கு உண்டு.**

## ராகுலின் ‘பெரியார்’ குரல்!



**ராகுல் ‘மனுசாஸ்திரத்துக்கு’ எதிராக வெளிப்படையாகவே பேசினார். பெரியார் இயக்கத்தின் குரலாகவே அது ஒலித்தது. இந்தியாவை ஆட்சி செய்வது டெல்லி அல்ல; ஆர்.எஸ்.எஸ். தலைநகர் நாக்பூர் என்றார். இட ஒதுக்கீட்டின் 50 சதவீத உச்சவரம்பை நீக்க வேண்டும் என்றார். உயர் பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் பங்கு என்ன? என்று ஊடகவியலாளர்களிடம் கேட்டார். நாட்டின் முதல் 200 தொழில் நிறுவனங்களில் ஒரு பிற்படுத்தப்பட்டவரோ, தாழ்த்தப்பட்டவரோ, உரிமையாளர்களாக இருக்கிறார்களா? என்று கேட்டார். (பிப் 18)**

**நாடாளுமன்றத்தில் பேசுகையில் அரசியல் சட்டத்தையும், மறு கையில் மனு சாஸ்திரத்தையும் ஏந்திக்காட்டி அரசியல் சட்டத்தைப் பின்னுக்குத் தள்ளி மனுசாஸ்திரம் ஆட்சி செய்கிறது என்று முழக்கமிட்டார். ராகுல். ஏகலைவன் கட்டைவிரலைத் துரோணாச்சாரியார் கேட்டதைப் போல ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை நசுக்குகிறது பா.ஜ.க. ஆட்சி என்று பெரியார் குரலை ஒலித்தார். (டிசம்பர் 14)**

**‘தகுதி திறமை’ பேசுவது மோசடி என்ற பெரியாரின் கருத்தை ராகுல் எதிரொலித்தார். தேர்வு முறையை யார் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்களோ அவர்களே தகுதியைத் தீர்மானிக்கிறார்கள் என்று நச்சென்று கூறினார்.**

## சிறைக்குள் பார்ப்பனர்கள்

**1. மகா விஷ்ணு (சூத்திர) என்ற மதப் பிரச்சாரகர் சைதை அரசுப் பள்ளியில் மாணவர்களிடம் “ஊனமாகப் பிறப்பவர்கள் முன் ஜென்ம பாவம்” என்று பேசியது சர்ச்சையானது. மகா விஷ்ணு கைது செய்யப்பட்டார்.**

**2. பெரியார் சிலையை உடைக்க வேண்டும் என்று பேசிய எச். ராஜா என்ற சங்கி பார்ப்பனருக்கு நீதிமன்றம் 6 மாதம் தண்டனை விதித்தது. ‘குற்றவாளியாக’ ஜாமீனில் வெளிவந்து மேல் முறையீடு செய்துள்ளார்.**

**3. திருவரங்கம் வேத பண்டிதர் ரெங்கராஜ நரசிம்மன், ஜீயர்கள், உதயநிதிப் பற்றி யூடியூப்பில் அவதூறு பரப்புரை செய்தார். கைது செய்யப்பட்டு பின்னர் நிபந்தனை பிணையில் வெளியே வந்துள்ளார்.**

**4. பெண் செய்தியாளர்களை ஆபாசமாக பதிவிட்ட எஸ்.வி.சேகர், ஒரு மாத சிறை தண்டனைக்குள்ளாகி மேல் முறையீடு செய்துள்ளார்.**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# பெரியார் நினைவு நாளில் ஜாதி ஒழிப்பு உறுதியேற்பு

***திருச்சி:*** தந்தை பெரியாரின் 51ஆவது நினைவு நாளை முன்னிட்டு திருச்சி மத்தியப் பேருந்து நிலையத்தில் உள்ள பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி தலைமை வகித்தார், திருவெறும்பூர் ஒன்றியப் பொறுப்பாளர் குணராஜ், மாவட்ட அமைப்பாளர் புதியவன் மற்றும் திருவரம்பூர் ஒன்றியப் பொறுப்பாளர் மணிகண்டன் குடும்பத்துடன் கலந்து கொண்டார்.

***மேட்டூர்:*** தந்தை பெரியாரின் 51ஆவது நினைவு தினத்தையொட்டி கோனூர் சமத்துவபுரத்தில் உள்ள தந்தை பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்விற்கு சேலம் மாவட்ட இளைஞரணிச் செயலாளர் பிரபாகரன் தலைமை வகித்தார். சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ் முன்னிலை வகித்தார்.

தந்தை பெரியார் அவர்களின் உருவச் சிலைக்கு பெண் தோழர்கள் மாலை அணிவித்தனர். தேன்மொழி கொள்கை முழக்கம் எழுப்பினார், பின்னர் அனைவரும் ஜாதி ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

இதில் கழகத் தலைமைக் குழு உறுப்பினர்கள் காவை ஈசுவரன், சக்திவேல், நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் கிருஷ்ணன், மாவட்ட மகளிரணி பொறுப்பாளர் சுதா, மாவட்ட இளைஞரணிச் செயலாளர் பிரபாகரன் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

இந்நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர்கள் டைகர் பாலன், அண்ணாதுரை மற்றும் கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் விஜயகுமார், நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் ராஜேந்திரன், வனவாசி நகரப் பொருளாளர் பன்னீர்செல்வம், RS பகுதித் தலைவர் முரளி, செயலாளர் விவேக், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சுசீந்திரன், தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர் நாகராஜ் மற்றும் மேட்டூர், மேட்டூர் RS, நங்கவள்ளி, கொளத்தூர், காவலாண்டியூர், வனவாசி ஆகிய பகுதிகளில் இருந்து பொறுப்பாளர்கள், தோழர்கள் கலந்து கொண்டனர்.

***சென்னை:*** தந்தை பெரியாரின் 51ஆவது நினைவு நாளை முன்னிட்டு சென்னை மாவட்டக் கழக சார்பில் சென்னை மாநகரில் உள்ள பெரியார் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இராயப்பேட்டை பெரியார் சிலையில் தொடங்கி சிம்சன் பார்க், தியாகராயர் நகர், சேத்துப்பட்டு, நங்கநல்லூர் உள்ளிட்ட இடங்களில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் அனைவரும் “ஜாதி ஒழிப்பு உறுதிமொழி” எடுத்துக் கொண்டனர்.

இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, தென் சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், தென் சென்னை மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், வட சென்னை மாவட்ட அமைப்பாளர் தட்சிணாமூர்த்தி உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

***மதுரை:*** தந்தை பெரியாரின் 51ஆவது நினைவு நாளை முன்னிட்டு மதுரை தல்லாகுளம் பகுதியில் அமைந்துள்ள பெரியாரின் சிலைக்கு மதுரை மாவட்டக் கழக சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தபட்டது.

இந்நிகழ்வில் மாவட்டக் காப்பாளர் தளபதி, மேலூர் பொறுப்பாளர் சத்தியமூர்த்தி, முருகேசன், வாசுகி, நாகபாலன் (புரட்சிக் கவிஞர் பேரவை) தமிழ்ப்பித்தன் (த.பெ.தி.க) மாநிலக்குழு உறுப்பினர். காமாட்சி பாண்டி (மாவட்டத் தலைவர்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

***திருப்பூர்:*** தந்தை பெரியார் 51வது நினைவு நாளை முன்னிட்டு திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் திருப்பூரில் உள்ள பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பி ஜாதி ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டன.

நிகழ்வுக்கு கழகப் பொருளாளர் சு.துரைசாமி தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் முகில் ராசு முன்னிலை வகித்தார்.

புரட்சிகர இளைஞர் முன்னணி தமிழ் அமுதன், ஆதித் தமிழர் பேரவை துணைப் பொதுச் செயலாளர் விடுதலைச் செல்வன் ஆகியோர் பெரியார் குறித்த செய்திகளைப் பகிர்ந்து கொண்டனர். தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி கொள்கை முழக்கம் எழுப்பினார். யாழினி ஜாதி ஒழிப்பு உறுதிமொழியை வாசித்தார்.

நிகழ்வில் கழக சமூக வலைதளப் பொறுப்பாளர் பரிமளராஜன், புரட்சிகர மக்கள் அதிகாரம் மாவட்டச் செயலாளர் கார்த்திகேயன், கழக மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, மாநகரச் செயலாளர் மாதவன், மாநகர அமைப்பாளர் சரசுவதி, மாநகர அமைப்பாளர் முத்து, தெற்குப் பகுதிச் செயலாளர் இராமசாமி, வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், அம்மாபாளையம் மோகன், கார்த்திக், முத்துலட்சுமி, வசந்தி இரவி, அய்யப்பன், ராஜ்குமார், சுபாசு, தமிழ்நாடு மாணவர் கழக மாவட்டச் செயலாளர் கனல்மதி ஈழமாறன், யாழினி, யாழிசை, பெரியார் விழுதுகள் அஸ்வின், வெற்றிமாறன், மகிழ்மாறன், தழல் சிறகன் ஆகியோர் பங்கேற்றனர்.

***தஞ்சாவூர்:*** தந்தை பெரியாரின் 51ஆவது நினைவு நாளை முன்னிட்டு பேராவூரணியில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தஞ்சாவூர் மாவட்ட அமைப்பாளர் தோழர் சித.திருவேங்கடம் தலைமை தாங்கினார், பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் திரு. நா.அசோக்குமார், தி.மு.க வடக்கு ஒன்றியச் செயலாளர் திரு.இளங்கோ, கழக ஒன்றியச் செயலாளர் மருத.உதயகுமார், தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் தி.சியாம், சி.பி.அய். ஒன்றியச் செயலாளர் வீரமணி, நகரச் செயலாளர் மூர்த்தி, CPM ஒன்றியச் செயலாளர் வே.ரெங்கசாமி, சிதம்பரம், தி.க. மாவட்டச் செயலாளர் தோழர் வை.சிதம்பரம், தி.க. பொதுக்குழு உறுப்பினர் இரா.நீலகண்டன், காங்கிரஸ் சேது வட்டாரத் தலைவர் சேக் இப்ராம்சா, வி.சி.க. பொறுப்பாளர் ஆத்ம.ஆனந்தகுமார், தமிழ்வழிக் கல்வி இயக்கம் நா.வெங்கடேசன், த.பழனிவேல், ம.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் பெரியசாமி, நகரச் செயலாளர் க.குமார், தமிழக மக்கள் புரட்சிக் கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் ஆறு.நீலகண்டன், பைங்கால் இரா.மதியழகன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

***ஈரோடு:*** தந்தை பெரியாரின் 51ஆவது நினைவுநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழக சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ப.இரத்தினசாமி தலைமையில் ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவிலுள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் கழகத்தினர் திரளாகக் கலந்து கொண்டனர்.

***ஆத்தூர்:*** தந்தை பெரியாரின் 51ஆவது நினைவு நாளை முன்னிட்டு ஆத்தூர் கொல்லன் பட்டறையில் அம்பேத்கர் - பெரியார் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

குறளரசன், அம்பேத்கரிய சிந்தனையாளர் கண்ணதாசன், கூடமலை செல்வராஜ், வெங்கடேசன், கவி.மணிகண்டன் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள். பெரியார் விழுதுகள் கலைமதி, அரவிந்தன், ரிஷிவிந்தன் ஆகியோர் பாடல்களைப் பாடினர். செங்கமலை நன்றி கூறினார்.

***பென்னாகரம்:*** தந்தை பெரியாரின் 51ஆவது நினைவு நாளை முன்னிட்டு பென்னாகரத்தில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

***நாமக்கல்:*** குமாரபாளையத்தில் தந்தை பெரியாரின் 51ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சமத்துவபுரத்தில் உள்ள தந்தை பெரியாரின் உருவ சிலை மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இதில் கழக நகரத் தலைவர் தண்டபாணி, துணைச் செயலாளர் கி.மாதேஸ்வரன், மு சாமிநாதன், மோகன், பிரகாஷ், திராவிடர் கழக மாவட்டத் தலைவர் ஆக்குகுமார், நகரச் செயலாளர் சு.சரவணன், காமராஜ், செல்வராசு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

***இராசிபுரம்:*** இராசிபுரம் நகரக் கழக சார்பில் இராசிபுரம் நகராட்சி அலுவலகம் எதிரில் வைக்கப்பட்டிருந்த பெரியார் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நகர அமைப்பாளர் சுமதி மதிவதனி தலைமை தாங்கினார்.

நகரச் செயலாளர் பிடல் சேகுவேரா வரவேற்புரை யாற்றினார். V.சுந்தரம், ExMc, அ.தி.மு.க. பிரபாகரன், மாநில துணைச் செயலாளர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இ.சி.எ.பாசறை. கபிலன், நாமக்கல் நாடாளுமன்ற தொகுதித் துணைச் செயலாளர், வி.சி.க. இராவணன், மாவட்டச் செயலாளர் ஆதித்தமிழர் கட்சி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

எழுத்தாளர் சிவக்குமரன், ஆசிரியர் மதியழகன், கோபி, மேற்கு ஒன்றியத் துணைச் செயலாளர். வி.சி.க. பூபதி, நகர அமைப்பாளர், இ.சி.எ. பாசறை. சதிஸ்குமார், ஒன்றியச் செயலாளர், ஆதித் தமிழர் கட்சி. கண்ணன், தொகுதி அமைப்பாளர், இ.சி.எ.பாசறை. ராம் குமார், ஒன்றியத் துணைச் செயலாளர், ஆதித்தமிழர் கட்சி. பிரசாந்த் குப்புசாமி, ஒன்றிய இளைஞரணிச் செயலாளர், ஆதித்தமிழர் கட்சி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.வெண்ணந்தூர் கழக ஒன்றிய பொறுப்பாளர் இராமச்சந்திரன் நன்றி கூறினார்.

***கள்ளக்குறிச்சி:*** பாக்கம், கடுவனூர் பேருந்து நிலையம் ஆகிய இரு இடங்களில் பெரியாரின் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. சங்கராபுரத்தில் உள்ள பெரியார் சிலைக்கு மாவட்ட அமைப்பாளர் சி.சாமிதுரை தலைமையில் மாலை அணிவித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இதில் ரிஷிவந்தியம் ஒன்றியத் தலைவர் மா.குமார், அமைப்பாளர் இரா.கார்மேகம், அறிவியல் மன்ற அமைப்பாளர் வீ.முருகன், தே.ராமச்சந்திரன், மு.நாகராஜ் சா.நீதிபதி, கி.ஆனந்தன் மற்றும் பாக்கம் கிராம தோழர்கள் சே.சஞ்சய், ச.வாசு ஏ.கலையரசன், வே.வாசுதேவன், கு.அருள் பாண்டியன், செ.முருகவேல், பி.தர்ஷன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**புரட்சிப் பெரியார் முழக்கம்**

ஆண்டு சந்தா : ரூ.300/-
அய்ந்தாண்டுச் சந்தா : ரூ.1500/-

தொடர்புக்கு :
ஆசிரியர். 15. தோழமை. வெங்கடேஸ்வரா நகர். பெருங்குடி. சென்னை - 96
பேச : 8973341377

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP

Posted : January 03, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran